## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 12/2017** **நாள். 22.11.2023**

2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22 ம் நாள் மனுதாரர் தரப்பு 2 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்குமார் | தொழில் | |
| த. பெ./க.பெ. | குப்பன் | சாதி | |
| கிராமம் | செம்மேடு | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 47 |

**ம..சா.2**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில்-2 ம் சாட்சி ஆவேன். நான் **ம.சா. 2 ஆக** இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு , கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

ஆவணங்கள் எதுவும் இல்லை.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கடந்த 28.10.2021 ம் தேதி மாலை 6.30 மணிக்கு விபத்து நடந்தது. எனது பூர்வீகம் செஞ்சி தாலுக்கா , செம்மேடு கிராமம் ஆகும். விபத்து திருவண்ணாமலை முதல் விழுப்புரம் செல்லும் சாலையில் அடுக்கம் என்ற கிராமத்தில் நடந்தது. நான் மாட்டு வியாபாரம் செய்வதற்காக விபத்து சமயத்தில் விபத்து நடந்த இடத்திற்கு சென்றேன். கண்டாச்சிபுரத்திற்கு மாடு வாங்குவதற்காக சென்றேன். விபத்து நடந்த சாலை ஒரே சமயத்தில் இரண்டு பேரூந்துகள் செல்லக்கூடிய அகலமான சாலை என்றால்சரிதான். டாடா ஏசி எனக்கு முன்னால்சென்று கொண்டிருந்தது. அதற்கு பின்னால் விபத்தில் காயம்பட்டவர் சென்றார். அதற்கு பின்னால் நான் சென்றேன்.

விபத்தில் காயம்பட்டவர் 10 மீட்டர் இடைவெளி விட்டு டாடா ஏசி வாகனத்திற்கு பின்னால் செல்லவில்லை என்றால் சரிதான். டாடா ஏசி வாகனம் டீசல் இல்லாமல் நின்று விட்டதால் பின்னால் சென்றவர் டாடா ஏசி வாகனத்தின் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. பின்னர் நானும், டாடா ஏசி வாகன ஓட்டுநரும் ஆம்புலன்ஸ் மூலம் காயம்பட்டவரை முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் காயம்பட்டவரின் உறவினர்களுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். போலிசார் விசாரணைக்கு பின்பு யாருக்கு எதிராக வழக்கு பதிவு செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் விபத்தில் காயம்பட்டவருக்கு எதிராக வழக்கை பதிவு செய்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனுதாரர்கள் எனக்கு உறவினர் இல்லை. மனுதாரர்கள் எனக்கு தெரிந்தவர்கள். மனுதாரர்கள் எனக்கு உறவினர் என்றாலும் விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும், மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதால் விபத்தைநேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 28.10.2021 ம் தேதி மாலை 6.30 மணிக்கு விபத்து நடந்தது. அடுக்கம் கிராமத்தில் விபத்து நடந்தது. விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். விபத்திற்கு டாடா ஏசி வாகன ஓட்டுநர் தான் காரணம் ஆவார். விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்தவர்க்கு காயம் ஏற்பட்டது. காயம்பட்டவரை நானும், டாடா ஏசி வாகன ஓட்டுநரும் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

மாடு வாங்கி விற்கும் தொழில் செய்கிறேன். அதற்காக சென்ற போது விபத்தை நேரில் பார்த்தேன். கடந்த 28.10.2021 ம் தேதி மாலை 6.30 மணிக்கு விபத்து நடந்தது. டாடா ஏசி வாகனத்திற்கு பின்னால் இருசக்கர வாகனம் சென்றதது. அதற்கு பின்னால் நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். டாடா ஏசி வாகன ஓட்டுநர் திடீரென்று பிரேக் பிடித்ததால் அதன் பின்னால் சென்ற இருசக்கர வாகன ஓட்டுநர் டாடா ஏசி வாகனத்தின் மீது மோதிவிட்டார். டாடா ஏசி வாகன ஓட்டுநர் திடீரென்று பிரேக் பிடித்ததால் தான் விபத்து ஏற்பட்டது. அதனால் விபத்திற்கு டாடா ஏசி வாகன ஓட்டுநர் தான் காரணம் ஆவார். விபத்தில் காயம்பட்ட இறந்துபோன இருசக்கர வாகனத்தில் வந்தவர் மீது தவறு இல்லை. காயம்பட்டவரை ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். நானும், டாடா ஏசி வாகன ஓட்டுநரும் காவல் நிலையத்திற்கு சென்றோம். என்னை காவல் நிலையத்திற்கு வெளியே நிற்க வைத்து விட்டு டாடா ஏசி வாகன ஓட்டுநர் காவல் நிலையத்திற்குள் சென்று புகார் கொடுத்தார். டாடா ஏசி வாகன

ஓட்டுநர் விபத்திற்கு தான் காரணம் என்பதை மறைத்து விட்டு விபத்தில் காயம்பட்ட இருசக்கர வாகன ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்று புகார் கொடுத்துள்ளார்.